**கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் -2016**

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல் இரசாயன மற்றும் நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2003 இன் 01 ஆம் இலக்க உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவக வழிகாட்டியின் 17 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு (ISSAI 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவின்

பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்று தொடர்பாக கருத்துக் கூறல்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

2016 ஆம் வருடத்திற்காக ரூபா 2,220,982 தொகையான வட்டி வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாட்டின் கீழ் நிதி உற்பாய்ச்சலொன்றாக காட்டப்படவேண்டியதற்குப் பதிலாக தொழிற்பாட்டுச் செயற்பாட்டின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 52,662,824 கிரயத்திலான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் சீராக்கல் செய்யப்படாதிருந்த முன்னைய ஆண்டின் சீராக்கல் தொகையான ரூபா 942,854 இனை காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டுச் செயற்பாட்டின் கீழ் சீராக்கப்பட்டிருந்ததுடன் மூலதன மாற்றல் கூற்றில் முன்னைய வருட சீராக்கலாக காட்டப்பட்டிருந்தது ரூபா 56,349 ஆகும். அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களின் துல்லியத்தன்மை தொடர்பாக கணக்காய்வின்போது சிக்கலானது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

மீளாய்வு வருடத்தில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கொள்வனவுப் பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பிடும் போது ரூபா 308,130 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை**

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|---|
| (அ). | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழக சட்டத்தின் 11 ஆம் பிரவில் 15(V) உப பிரிவு | உயர் கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறவேண்டியிருந்தும், 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 03 பாடநெறிகளுக்கு உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 பிரிவுகள | நிறுவகத்தின் 05 கல்விசார் உத்தியோகத்தர்களினது வருகையை உறுதிப் படுத்தாமல் ரூபா 7,623,341 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 15,130,687 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,613,509 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 11,517,178 ஆல் அதிகரித்திருந்தது, ஏனைய மீண்டெழும் செலவினங்கள் ரூபா 7,947,535 ஆல் குறைந்தமையும் மற்றும் உழைத்த வருமானம் ரூபா 3,993,424 ஆல் அதிகரித்தமை மேலே அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வு ஆண்டு மற்றும் முன்னைய நான்கு வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும்போது 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையில் மிகை தளம்பல்களுடன் அதிகரித்திருந்தது. எவ்வாரிருந்தும் நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியங்கள் மற்றும் அசையா சொத்துக்களிற்கான தேய்மானத்தினை மீண்டும் சீராக்கல் செய்ததன் பின் 2012 ஆம் வருடத்தில் ரூபா 26,189,085 பங்களிப்பு 2016 ஆம் ஆண்டாகும் போது ரூபா 58,912,652 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் நடைமுறை விகிதம் 7.8 ஆக இருந்த போதிலும், நடைமுறைச் சொத்துக்களில் 49 சதவீதம் குறுங்கால முதலீடுகளையும் காசு மீதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், நிறுவகத்தின் கருத்திற் கொள்ளக்கூடிய சொத்துக்கள் திரவச் சொத்துக்களாக பேணப்பட்டுச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

நிறுவகத்தின் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் படி நிறுவகத்தின் பிரதான நோக்கம் நுண்ணுயிரியல் மற்றும் அதனுடன் இணைந்த துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச தொழில் சந்தைக்கு உகந்த உயர் தரத்திலான பட்டப்பின்படிப்பாளர்களை உருவாக்குதல், உயிரியல் தகவல் துறையில் தேர்ச்சி நிலையமொன்றாக ஆகி தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல், உகந்த சூழலொன்றை மற்றும் ஒத்துழைப்புக் கலாச்சாரமொன்றை ஏற்படுத்துதல், சமூகப் பொறுப்புக்களை மேம்படுத்தி சமூக முன்னேற்றத்திற்காக் கற்பித்தல் மற்றும் சேவைகளை வழங்குவதினுடாக வருமானத்தை உச்சநிலைக்குக் கொண்டுவருதல் நல்லாட்சியாகும்.

இந் நோக்கங்களை அடைந்து கொள்ளுதுல் தொடர்பாக கீழே அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ). 2016 ஜுலை 05 ஆம் திகதிய 38 ஆம் நிதி மற்றும் முகாரமத்துவக் குழு அறிக்கையின் பிரகாரம் நுண்ணுயிரியல் நுட்பங்கள் தொடர்பான குறுங்கால பயிற்சி நெறிக்காக (Training Course in Cell Culture Techniques) ரூபா 500,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வு ஆண்டினுல் குறித்த பயிறசிநெறி நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ). நிறுவகத்தின் செயல்திட்டத்தின் 04 ஆம் இலக்க குறிக்கோலின் கீழ் கற்பித்தல் மற்றும் சேவைகளை வழங்குவதினுடாக உருவாகும் நிதியினை உச்சப்படுத்திக் கொள்வதற்காக வியாபார அபிவிருத்திக் கூறினை உறுதிப்படுததும் வழிகளும்வழிமுறைகளும்அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அதன் கீழ் சட்ட அறிவுரைகள் மற்றும் உசாவுகை, நிலையான சொத்துக் கொள்வனவு, ஆராய்ச்சிகள் கண்டுபிடிப்புக்களை சந்தைப்படுத்தல், மார்பகப் புற்றுநோய் தொடர்பான பரிசீலனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மார்பகப் புற்றுநோய் காரணமாக ஏற்படக்கூடிய மாற்றங்களைப் பரிசீலித்தல் (Mutation Testing for Brest Cancer) போன்ற நடவடிக்கைகள் காட்டப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டில் 02 ஆய்வுகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.
மார்பகப் புற்று நோயுடன் தொடர்புடைய பரிசிலான நடவடிக்கைகளின் இனங்காணல் மீதான ஆய்வுகள் 2016 ஆம் ஆண்டிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்குத் தேவையான போதுமான நடவடிக்கைகளை நிறுவகம் மேற்கொள்ளாதது அவதானிக்கப்பட்டது.

(இ). உயிரியல் தகவல் விஞ்ஞானமானி பட்டப்பின படிப்பு பாடநெறிக்காக 2012 ஆம் ஆண்டின் பின் மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை என்பதுடன் 2015 ஆம் ஆண்டு முதல் அப்பாடநெறிப் பாடத்தின் உள்ளடக்கம் மீளாய்வு செய்யப்படுகின்றது. இது தொடர்பாக 2015 செப்டெம்பர் தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2017 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை 07 மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் பாடநெறி தொடர்பாக முன்மொழியப்பட்ட சட்டங்கள் வரைவு செய்யப்பட்டு ஆய்வுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் பாடநெறியை மீள ஆரம்பிக்க இயலுமான கால எல்லை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. பாடநெறியை ஆரம்பித்தல் 04 வருடங்கள் தாமதமாகிய காரணத்தினால் பாடநெறியைத் தொடர்வதற்கு எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் மாணவர்களுக்கு இல்லாதுபோயிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ). உயிரியல் தகவல் விஞ்ஞானமானி பட்டப்பின்படிப்பு பாடநெறியில் திறமையான மாணவர்களுக்காக தங்கப்பதக்கங்களை வழங்குவதற்காக 2015 ஜுலை மாதத்தில் தனியார் தரப்பினரொருவரிடமிருந்து ரூபா 200,000 நன்கொடை கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதனை மீளாய்வு ஆண்டினுல் தகுந்த முதலீடுகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2015 ஆம் வருட இறுதியில் மேலே பாடநெறிக்காக பட்டமளிப்பு விழாவொன்று நடாத்தப்பட்டிருந்தாலும் எதிர்பார்க்கப்பட்டவாறு திறமையான மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததனால் நன்கொடையாளர்களின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) செலவிடப்பட்ட மூலதன அளிப்பின் கீழ் கானப்படுகின்ற இரண்டு நன்கொடைக் கணக்குகளில் பல வருடங்களாகக் கானப்படுகின்ற கூட்டுத்தொகையான ரூபா 1,991,832 பற்று மீதியினை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் சம்பந்தமாக திறைசேறியிலிருந்து கிடைத்திருந்த ரூபா 2,791,677 மூலதன அளிப்பு மீளாய்வு ஆண்டினுல் சம்பந்தப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிராததுடன், குறித்த தொகை புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் தொடர்பான அரச உதவிக்கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 4.4 பதவியணி நிர்வாகம்

அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியில் 03 பதவிகள் வெற்றிடமாகக் கானப்பட்டதுடன் குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், வெற்றிடமாகக் கானப்பட்ட கலங்கள் மற்றும் நுண் எதிர்ப்புச்சக்தி தொடர்பான விஞ்ஞானமானி பாடநெறிக்காக (MSc in Cellular & Molecular Immunology) சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளரொருவரை ஆட்சேர்ப்பு செய்து 2016 ஆம் வருடத்தினுல் மீண்டெழும் ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா 678,796 ஆன படிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பெறுகைத் திட்டம்

நிலையான சொத்துக் கொள்வனவு தொடர்பாக மீளாய்வு ஆண்டினுல் திறைசேறியிலிருந்து ரூபா 9,520,000 ஆன தொகையொன்று கிடைத்திருந்ததுடன் மீளாய்வு ஆண்டினுல் உண்மையான கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 6,120,257 ஆனதினால் நிறுவகத்தின் வருடாந்த பெறுகைத் திட்டத்திற்கு அமைவாக திட்டமிடப்பட்டிருந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் தொடர்பாக விஷேட கவனம் செழுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமை மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ). களஞ்சியசாலை நிர்வாகம் | வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பை சரியாக மேற்கொண்டு இருப்பு ஏடுகளை நாளதுவரைப்படுத்திப் பேணாமை |
| (ஆ). பதவியணி நிர்வாகம் | பதவியணித் தேவைக்கேற்றவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தத்திற்கு மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை |
| (இ). கணக்கீடு | கணக்குகளுக்கிடையில் பரிமாற்றத்தின்போது ஏடுகளில் சரியாக குறிப்புக்களைப் பதிவு செய்யாமை மற்றும் சரியான பரீட்சை மீதியை தயாரித்திருக்காமை |